

# மழலைத் தமிழ் அமுதம்

யாழ். இணுவில்

சின்னத்துரை பாலச்சந்திரன்

அந்தியேட்டித்தின வெளியீடு

2003-04-12

921
பாலச்
SL/PR



## யோக சுவாமிகளின்
## திவ்விய மகாவாக்கியங்களிற் சில

ஒரு பொல்லாப்புமில்லை.

எப்பவோ முடிந்த காரியம்:

எண்ணாயிரம் வருடங்களுக்கு முன்னே

டெல்ஹி மாநகரிலே

செப்புத் தகட்டிலே

எழுதி வைத்தது.

முழுதும் உண்மை.

அது அப்படித்தான்.

நூதன மொன்றுமில்லை,

சுற்றிச் சுற்றிச் சுப்பருடைய கொல்லை.

காயமொரு சித்திரக் கோயில்.

02 AUG 2003

# மழலைத் தமிழ் அமுதம்

## நினைவிற்கு ஓரிதழ்

யாழ் இணுவில்

**சின்னத்துரை பாலச்சந்திரன்**

**2003-04-12**

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

அன்புருவாய் அகத்திலுறை அருமருந்தே அப்பா

ஆனதுயர் அனைத்துமேற் றகமகிழ்வு தந்தோய்

துன்பமெலா முனதாக்கித் துயர்களைந்து போற்றும்

துடிப்பினராய் எமைவளர்த்துத் தொல்லுலகிற் களித்தோய்

இன்பமிகு நின் நினை வை இதயத்தே இருத்த

ஏற்றமுறு மழலைப்பா அமுதொன்று சமைத்தோம்

அன்புருவாம் ஆடலிறை தாளிலதைச் சூட்டி

அஞ்சலித்தே அப்பாநும் அழகுருவைக் கண்டோம்.

*மனைவி*
வாசுகி பாலச்சந்திரன்

*பிள்ளைகள்*
சிவந்தன்,
ஷர்மிளா,
சிந்துஜா

15B, டொன் கரோலிஸ் வீதி
கொழும்பு -05.

உ
சிவமயம்

அமரர்

# சின்னத்துரை பாலச்சந்திரன்



| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 1946-10-27 | 2003-03-12 |

திதிவெண்பா

சித்திர பானுமாசி சேர்பூர்வத் தார்தசமி
சித்தன்சேய் சின்னத் துரையாரின் - புத்திரனார்
பார்புகழ்பா லச்சந் திரவண்ணல் பண்ணவன்தாள்
நேரிதென நேர்ந்தடைந்த நாள்.

உ

*சிவமயம்*

# வெளியீட்டுரை

தாமார்க்குங் குடியல்லாத் தன்மையன் ஆன சங்கரனுக்கு ஆளாயின காரணத்தால் “நாமார்க்கும் குடிஅல்லேம்; நமனை அஞ்சேம்” என்னும் திருநாவுக்கரசு நாயனாரின் உறுதிப்பாட்டைத் தமதாக்கிக் கொண்டு வாழ்ந்தவர் எங்கள் அப்பா. இறை நம்பிக்கையில் உறுதியாக நின்ற அவர் நாயன்மாரின் வாக்குகளைப் பொன்னே போற்ற போற்றியவர். அதேவேளை, நேர்மை, நிதானம், வாய்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு முதலான நல்லியல்புகளுக்கு இருப்பிடமானவர். அவர் எங்களுக்கு அப்பா என்பது உண்மைதான். அதேவேளை உலகியலை அறிவுறுத்தும் ஆசானாக, நல்ல நெறிக்காண் இட்டுச் செல்லும் வழிகாட்டியாக, இறைவழிபாடு அதன் மேன்மை பற்றி அறிவுறுத்தும் ஞான குருவாக, சேர்ந்து விளையாடிக் களிப்புற வைக்குந் தோழனாக வெல்லாம் அவரைப் பார்க்க முடிந்தது.

அப்பாவின் தூல உடம்பு மறைந்துவிட்டதென்பது உண்மை யென்றாலும் அவர் எங்களை விட்டு நீக்கிவிட்டார் என்று சொல்வதற்கில்லை, அவர் எங்களுடனாகி இருக்கிறார் என்பதை எங்கள் ஒவ்வொரு செயலிலும் நாங்கள் உணருகின்றோம்.

சின்னஞ்சிறிய குழந்தைகளுடன் விளையாடுவதில் எங்கள் அப்பா இன்பங் காணுபவர். பூஜிதா, துவாரகேஷ் என்னும் பேரக் குழந்தைகளுடன் மட்டுந்தான் என்றில்லை. எந்தக் குழந்தையிடத்தும் அவர் அன்பு பாராட்டுவதைக் காணலாம். அதனாலேதான் அவர் மன அமைதியைச், சாந்தியை நினைவிற் கொண்டு குழந்தைகளுக்கான பாடல் தொகுப்பொன்றினை வெளியிட்டுள்ளோம். அது அப்பாவின் ஆத்ம சாந்திக்கான ஒரு காணிக்கையாக அமையும் என்றும் நம்புகின்றோம்.

இந்த வெளியீட்டில் இடம் பெற்றுள்ள பாக்களின் ஆசிரியர்களுக்கு, அனுதாபச் செய்தி வழங்கிய நல்லை திருஞான சம்பந்தர் ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களுக்கு மனதுக்கு அமைதி தரவல்ல பொருட் பொதிவுடனான பிரார்த்தனை உரையை வழங்கிய கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு , ஆத்மசாந்திப் பாடல்களை இணுவையூர் மக்கள் சார்பில் வழங்கிய மஹாவித்துவான் சிவஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களுக்கு, ஆத்மசாந்தி உரையை வழங்கிய இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீசோமஸ்கந்த குருக்கள் அவர்களுக்கு , இரங்கல் செய்தி வழங்கிய புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவைச் சித்தி விநாயகர் கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ சோ.பாலகிருஷ்ண ஐயர் அவர்களுக்கு இந் நூலை அழகுற அச்சிட்டுதவிய யூனி ஆட்ஸ் நிறுவனத்தாருக்கு, இந்நூல் ஆக்கம் பெறுவதற்கு எம்முடனாகி நின்று உழைப்பு வழங்கிய பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களுக்கு எம் நன்றி என்றென்றும் உண்டு.

| *மனைவி* | *பிள்ளைகள்* | *மருமக்கள்* |
|---|---|---|
| *வாசுகி பாலச்சந்திரன்* | *சிவந்தன்* | *வித்தியா* |
| *இணுவில் தெற்கு,* | *ஷர்மிளா* | *கிருபரன்* |
| *இணுவில்.* | *சிந்துஜா* | *ரஜிவ்தர்மேந்திரா* |



*உ*
*சிவமயம்*

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரை

பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி என்னும் வாக்குப் பல காலமாக எம்மிடையே பழகி வந்தது. என்றாலும் குறிப்பிட்ட சிலருடைய மறைவு எம்மைப் பெரிதும் துன்பத்திலாழ்த்துகிறது. இதனைத் தாங்கிக் கொள்ள வேண்டிய கடமையையும் இறைவன் எம்மேல் சுமத்தி இருக்கின்றான்.

எங்கள் மதிப்புக்கும் பாராட்டுக்குமுள்ள ஒரு குடும்பம் இணுவில் சின்னத்துரை ஐயா அவர்களின் குடும்பமாகும். பொருட்கொடையாலும் அருட்கொடையாலும் சிறப்புப்பெற்ற குடும்பம் இவர்களுடையது. அன்பு,பண்பு, கடவுள் பக்தி நிறைந்த இப்பெரியாரின் மகனாக அவதரித்தவரே பாலச்சந்திரன் ஆவர். அவரும் திருமணம் செய்த குடும்பமும் பாரட்டுக்குரியதே. புன்னாலைக்கட்டுவன் என்றால் இராசரத்தினம் அவர்களின் நாமம் பின்னிப்பிணைந்திருக்கும் சிறப்பினைக் கொண்டது. இத்தகைய பெருமையும் சிறப்பும் மிளிரும் குடும்பத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் அவர்கள் அமரராகி விட்டார் என்ற செய்தி எம்மைத் திடுக்கிட வைத்தது. எங்கள் துர்க்கை அம்பாளிடத்து நீங்காத பக்தி கொண்ட குடும்பம் இவர்களுடையது. தான தர்மத்தை வளர்ப்பதிலும் பெரியோர்களை மதிப்பதிலும் திருக்கோயில் கடமைகளைச் செவ்வனே ஆற்றுவதிலும் மக்கள் மனதில் இடம் பெற்றவர்கள் இவர்கள்.

எனவே அமரர் பாலச்சந்திரன் அவர்களின் மறைவினால் துயருறும் அவர்கள் குடும்பத்துக்கு ஆறுதல் கூறுவது எமது கடன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்,

தங்கம்மா அப்பாக்குட்டி
*சமாதான நீதிபதி*
*தலைவர்,*

*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை.*

உ
சிவமயம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

# அனுதாபச் செய்தி

திரு. சின்னத்துரை பாலச்சந்திரன் மறைவை அறிந்து மன நெகிழ்தோம் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைத்த பண்புள்ளவர்கள் அவர்கள். மனித நேயத்துடன் ஏனையோருக்கு வழிகாட்டியாக வாழ்ந்த திரு. பாலச்சந்திரன் யாழ்ப்பாணத்தில் அறப்பணிகளை நிலைநாட்டிய திரு. திருமதி சின்னத்துரை குடும்பத்தினருக்கு மகனாவர் புன்னாலைக்கட்டுவன் திரு. ச. இராசரத்தினத்தின் மருமகனாகிய திரு.பாலச்சந்திரனின் மறைவு அவரின் குடும்பத்திற்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் பெரும் இழப்பாகும். இவ்வுலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் மறைவது நியமம். இதற்குள் நாம் செய்து கொண்ட நற்காரியங்களே நம்மை வாழவைக்கின்றன.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்று போற்றுகின்றார் வள்ளுவர். இதை ஒவ்வொரு மனிதரும் உணர்வாராக. திரு. சி. பாலச்சந்திரன் குடும்பத்தினர் துயரில் இருந்து மீள இறைவன் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். திரு.பாலச்சந்திரனின் ஆத்ம சாந்தி அடைய எல்லோரும் பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி - சாந்தி - சாந்தி*

*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்*

*நல்லூர், யாழ்ப்பாணம்.*



உ
சிவமயம்

# இரங்கலுரை

*"அரிது அரிது மானிடராதல் அரிது"*

என்ற முது மொழி வாக்கிற்கு அமைய மனிதரிற் சிறந்த மாணிக்கமாய்ச் சைவம் வளர் இணுவையம்பதியிலே பிறந்தவர் சின்னத்துரை பாலச்சந்திரன் அவர்கள். தும்பிக்கையனென நம்பிக்கையுடன் தொழுதால் வினைகள் யாவும் அற்றுப் போகும் என்பது ஸ்த்யம் ஆகும். அன்னாரும் இளமை தொட்டு விநாயகனின் மேல் அளவிலாப் பக்தி பூண்டு வழிப்பட்டவர். இவரும் இவரது தந்தையாருடன் சேர்ந்து எமது ஆலயத்திலே பல அரும்பெரும் பணிகளைச் செய்தவர். இவரது தோற்றமே தூய்மைக்கு ஓர் கலங்கரை விளக்கமாக எடுத்தியம்பும். இத்தன்மை வாய்ந்த நல் உத்தமன் பரிசுத்த ஆத்மாவின் இழப்பு நம் எல்லோரையும் துன்பசாகரத்திலே விழச் செய்கிறது அன்னாரின் ஆத்மா பரிபூரண சாந்தி அடைய எல்லாம் வல்ல தெய்வமாகிய ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையாரை ஸ்துதிக்கிறேன்

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

நன்றி

*இங்ஙனம்*

*வை. சோமாஸ்கந்தகுருக்கள்*

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்

இணுவில்

உ
சிவமயம்

# இரங்கற் செய்தி

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தொழிலதிபர் அமரர். சி.பாலச்சந்திரன் அவர்கள் 12.03.2003 புதன்கிழமை காலமானதை அறிந்து மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

அன்னார் யாழ்ப்பாணம் சி.சின்னத்துரை தம்பதியினரின் இனிய புதல்வரும் புன்னாலைக்கட்டுவன் திரு.எஸ்.ராஜரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார். இவரது குடும்பத்தினரும் தொழில் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் ஆலயத் திருப் பணிகளிலும் சமூக சேவையிலும் அதிக ஈடுபாடு கொண்டவர்களாவர்.

குறிப்பாக எஸ்.ராஜரட்ணம் அவர்கள் எமது ஆலயத்திற்குச் செய்த திருப்பணிகள் எண்ணில் அடங்கா. எனது பெரிய தகப்பனார் கே.சீ.பீ.ஐயாவின் வழிகாட்டலில் தேர்த் திருப்பணி போன்ற பல ஆலய திருப்பணிகளை நிறைவேற்றிய பெருந்தகை அண்மையில் வசந்த மண்டபம் அமைத்துக் குடமுழுக்கைச் சிறப்புற நடத்தி வைத்தமை பெருமைப்பட வேண்டியதாகும்.

இவ்வளவு பெருமையும் தகைமையும் வாய்ந்த குடும்பத்தினருக்கு அமரர் பாலச்சந்திரனது இழப்பானது ஈடுசெய்ய முடியாததாகும். அன்னாரது மறைவினால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்ப அங்கத்தினர் அனைவருக்கும் புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை ஐங்கரன் மன ஆறுதலையும் துயரத்தைத் தாங்கும் சக்தியையும் அருள்வாராக, இன்றைய தினத்தில் அன்னாரது ஆத்மா சாந்தியடையச் சித்தி விநாயகருடைய பாதார விந்தங்களை இறைஞ்சுகின்றேன்.

*குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே*
*உடம்பொடு உயிரிடை நட்பு*

ஆயக்கடவைச் சித்திவிநாயகர் தேவஸ்தானம்
புன்னாலைக் கட்டுவன், சுன்னாகம்.

அன்புள்ள
சோ.பாலகிருஷ்ண சர்மா (*பிரதம குரு*)
மற்றும் ஆலய அந்தணர்களும்.



உ
சிவமயம்

*திருச்சிற்றம்பலம்*

# தேவாரம்

## திருஞானசம்பந்தர்

ஒளிகொள் வாளெயிற் றரக்கனவ் வுயர்வரை
யெடுத்தலும் உமையஞ்சிச்
சுளிய வூன்றலுஞ் சோர்ந்திட வாளொடு
நாளவற் கருள்செய்த்
குளிர்கொள் பூம்பொழில் சூழ்தரு கோட்டூர்நற்
கொழுந்தினைத் தொழுவார்கள்
தளிர்கொள் தாமரைப் பாதங்கள் அருள்பெறுந்
தவமுடை யவர்தாமே.

## திருநாவுக்கரசர்

கைத்தலங்கள் இருபதுடை அரக்கர் கோமான்
கைலைமலை அதுதன்னைக் கருதா தோடி
முத்திலங்கு முடிதுளங்க வளைகளெற்றி
முடுகுதலுந் திருவிரலொன் றவன்மேல் வைப்பப்
பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்
பரிந்தவனுக்கு இராவணனென் றீந்த நாமத்
தத்துவனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே.

## சுந்தரர்

இலங்கை வேந்தன் எழில்திகழ் கயிலை
எடுப்ப ஆங்கிம வான்மகள் அஞ்சத்
துலங்கு நீள்முடி ஒருபதுந் தோள்கள்
இருப துந்நெரித் தின்னிசை கேட்டு
வலங்கை வாளொடு நாமமுங் கொடுத்த
வள்ள லைப்பிள்ளை மாமதிச் சடைமேல்
நலங் கொள் சோதிநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே.

## திருவாசகம்

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளிமையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல் ஆடரவம்
துவளுமே கலையும் துகிலுமே ஒருபால்
துடியிடை இடமருங் கொருத்தி
அவளுமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித் தேச்சரமே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகள் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்

*திருச்சிற்றம்பலம்*

## திருப்புகழ்

காமியத் தழுந்தி இளையாதே
காலர்கைப் படிந்து மடியாதே
ஓமெழுத்தில் அன்பு மிகவூறி
ஓவியத்தில் அந்தம் அருள்வாயே
தூமமெய்க் கனிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

உ
சிவமயம்

## அமரர்
## சின்னத்துரை பாலச்சந்திரன் அவர்கள்
# வாழ்வும் வளமும்

நீர் வளம் நிலவளத்துடன் தெய்வத்திருத்தலங்கள் சூழ்ந்திருக்க, கல்விமான்களும், தொழில்வல்லுனர்களும், பாவலரும் கலைஞர்களும் சிறந்து விளங்கும் கிராமம் இணுவில், சிறார்களின் அறிவைப் பெருக்கும் கல்வி நிலையங்களின் பரிமளிப்பும் இங்கு நிறைய உண்டு.

அத்தகு புனிதமான சூழலில் வாழ்ந்து கொண்டிருப்பவர் தான் பிரபல தொழிலதிபர் சிவக்கொழுந்து சின்னத்துரை அவர்கள். செய்யும் தொழிலே தெய்வம் என்ற உயர் இலட்சியத்துடன் வாழும் அவர்கள், தம்முடனாகி நின்று பணி புரிகின்ற தொழிலாளர்களையும் அன்பாக, கௌரவமாக நடத்தும் பெருந்தகை. தாம் முதலாளி அவர்கள் தொழிலாளர் என்ற உயர்வு, தாழ்வு கற்பிக்காது இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமம் என்ற பெரிய சிந்தனையைத் தமதாக்கி வாழ்ந்து காட்டியவர் அவர். அந்த வகையினதான வாழ்க்கை முறைதான் அவர் உயர்விற்கான இரகசியம் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள முடியாது இருந்திருக்கலாம்.

அந்த அளவிற்குப் பண்பட்ட உள்ளத்துடன் வாழும் சின்னத்துரை அவர்களின் தந்தை தாவடியைச் சேர்ந்த சிவக் கொழுந்து அவர்கள். அன்னை கோண்டாவில் கனகம்மா அவர்கள் சிவக்கொழுந்து கனகம்மா தம்பதியின் அருந்தவப் புதல்வரான சின்னத்துரை அவர்கள் உரிய வேளையில் இணுவில் சதாசிவம் வள்ளியம்மை தம்பதியின் அருமைப் புதல்வி, மங்கை நல்லாள் சோதிப்பிள்ளையைத் திருமணஞ் செய்து பெற்ற முதலாவது



செல்வமகன்தான் அமரர்பாலச்சந்திரன் அவர்கள். புவனச்சந்திரன், சிவமலர், வசந்தமலர், இந்துமலர், ஞானச்சந்திரன் என்போரது அன்பிற்குரிய அண்ணனாக வந்த பாலச்சந்திரன் இளமையிலேயே துடிதுடிப்பு உள்ளவராகக் காணப்பட்டார். வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்று சொல்லுவார்கள். அந்த அளவிற்குக் குறும்பும், அதேவேளை எல்லோரையும் ஒரு கட்டுக்கோப்புள் வைத்திருக்குந்திறனும் அவரிடம் காணப்பட்டன.

கல்வி பெறும் நோக்கில் இணுவில் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி. யாழ் இந்துக் கல்லூரி, கொழும்பு கேரிக்கல்லூரி என்னுங் கல்வி நிலையங்களை அவர் சார்ந்திருந்ததுண்டு. அந்த வேளை சக மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் பெரிதாக மதிக்கப்பட்டார். வர்த்தகத்துறையில் உயர் தகைமை பெறும் பொருட்டு லண்டனில் 1967 தொடக்கம் 1969 வரை உயர் கல்வி பெற்றார்.

தாம் பெற்ற கல்விக்கான கௌரவமான தொழிலைப் பெற வேண்டுமே என்று அவர் அலைய வேண்டிய நிலை இருக்கவில்லை. தம் குடும்ப நிறுவனமான சி. சின்னத்துரை அன் பிறதேஸ், கல்கி நிறுவனங்களில் தன் தந்தையாருடன் சேர்ந்து அவற்றை மேலும் வளர்க்கும் முயற்சிகளிற் பங்காளரானார். 1978 இல் "பெஸ்கோட்ஸ் லிமிரெட்" என்னும் இறால் பதனிட்டு ஏற்றுமதி செய்யும் நிறுவனத்தை ஆரம்பித்து நாட்டின் முன்னோடி வர்த்தகர்களுள் ஒருவரானார். நாட்டில் வளர்ந்து கொண்டிருந்த அரசியல் நெருக்கடி காரணமாக அத்தொழில் வளர்ச்சி கண்டு கொள்ள முடியாததொரு நிலைமை உருவாகியது. அதனால் "கல்கி இம்பெக்ஸ் லிமிரெட்" என்னும் நிறுவனத்தை உருவாக்கி உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யத் தொடங்கினார். மருந்துப் பொருட்களின் வினியோகமும் உடனாகியது. அவர் தொடங்கிய இத்தொழில்கள் இன்றும் உன்னத நிலையை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கின்றன.

திரு. பாலச்சந்திரன் அவர்கள் புன்னாலைக்கட்டுவனின் மதிப்பார்ந்த தொழிலதிபர் சங்கரப்பிள்ளை இராஜரட்ணம் துணைவி பரமேஸ்வரி என்போர் அன்பு மகள் - வள்ளுவனாரின் வாழ்க்கைத் துணை நலத்தின் பெயரைத் தாங்கிய - வாசுகி என்னும் மங்கையர்க்கரசியை 1971 மே 29 ஆம் நாள் வாழ்க்கைத் துணையாக்கி இன்பந் துய்த்தமை காரணமாகச் சிவந்தன். ஷர்மிளா, சிந்துஜா என்னுஞ் செல்வங்களைப் பெற்றுக் கொண்டனர். திரு. பாலச்சந்திரனின் பிள்ளைகள் மூவரும் உயர்கல்வி பெற்று மக்கள் போற்றுதலுக்கு உள்ளாகி இருப்பதுடன் பொற்றோரைப் போற்றும் உயர் பண்பினராகியும் வாழ்ந்து பெற்றோர் தக்கார் தாமென்றும் நிரூபித்து நிற்கின்றனர். அன்புக்கொரு வாரிசென வந்த சிவந்தன் மக்களுயிர் உடலுடனாகி ஒன்றித்து வாழ்வதற்கு அநுசரணையாகும் வைத்திய கலாநிதித் தகைமை பெற்று DR. சிவந்தன் MD என்னுஞ் சிறப்புடன் யாழ் நல்லூரைச் சேர்ந்த வித்யா எனும் வர்த்தகத்துறைப் பட்டதாரி மங்கை நல்லாளைத் துணைவியாகத் தேர்ந்து கொண்டு செல்வச் சீமான்கள் வாழும் அமெரிக்க நாட்டிற் பணி புரிகின்றார்.

அருமைப் புதல்வி, ஷர்மிளா என்னும் மங்கையர் திலகம் உலகில் புனிதத்தைப் புனிதமாகப் பேணும் சிங்கப்பூர் என்னும் சின்ன நாட்டிற் பட்டயக் கணக்காளராகப் பணிபுரிகின்றார். அவர் யாழ் இளவாலையைச் சேர்ந்த கிருபரன் மகாதேவன் என்னும் பொறியியலாளரது வாழ்க்கைத் துணை நலம் என்னும் உயர் பதவியையும் தமதாக்கிக் கொண்டுள்ளார்.

மூன்றாமவராகிய செல்வமகள் சிந்துஜா ஒரு வர்த்தகத் துறைப் பட்டதாரி. அவர் ஜோன் கீல்ஸ் நிறுவனப் பணிப்பாளர் ரஜிவ் தர்மேந்திரா அவர்கள் வாம பாகத்தை அலங்கரிக்கும் பெருவாழ்வாம் பெரும் பதவி உடனாகி மகிழ்கின்றார்கள்.



அமரர் பாலச்சந்திரன் தம் மூத்த புதல்வி ஷர்மிளா மூலங்கிடைத்த பூஜிதா, துவாரகேஷ் என்னும் பேரக் குழந்தைகளுடன் விளையாடும் பெரும் பாக்கியத்தையும் அனுபவித்துள்ளார்.

பிள்ளைகளுடனான திருமணங்கள் மூலம் தென்னாபிரிக்க நாட்டிற் பணிபுரியும் DR. N.யோகநாதன் அவர் துணைவி சிவகுமாரி, சிங்கப்பூரிலுள்ள V.மகாதேவன் விஜயலஷ்மி குடும்பம், கொழும்பு K.குலவரதராசா அமரர் கௌரி மனோகரி என்போரைச் சம்பந்திகள் ஆகப் பெற்று உறவாடும் பெரும் பாக்கியத்தையும் பெற்றுள்ளார்.

இவ்வண்ணம் எல்லா நலன்களையும் அனுபவித்த பாலச்சந்திரன் அவர்கள் கடந்த 2003 மார்ச் மாதம் 12ம் திகதி புதன்கிழமை அதிகாலை மூன்று மணியளவில் எல்லோரையும் ஆழ்ந்த துக்க சாகரத்துள் அமிழ்த்திவிட்டுத் தாம் இறைவன் திருவடி நீழலை அடைந்து விட்டார்கள். அவர் ஆத்மா இறைவன் திருவடிகளுடனாகி இன்புறப் பிரார்த்தித்து அமைதியடைவோம்.

# காரியசித்தி மாலை

இந்தக் காரியசித்திமாலையைக் காலை, மாலை, மதியம் இம்மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி எட்டு நாட்கள் படிப்பவர்கட்கு நினைத்த காரியம் சித்திக்கும். சதுர்த்தி தினத்தில் எட்டுத்தரம் படிப்பவர்கட்கு எட்டுச் சித்திகளும் கைகூடும் முழு நம்பிக்கையோடும் விநாயகரை எண்ணிப் படித்தல் வேண்டும். நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். ஐயமில்லை.

## ஸ்ரீ மகாகணபதி மந்திரம்

மூசிக வாகன மோதக கஸ்த
சாமர கர்ண விலம்பித சூத்ர
வாமனரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே
கஜானனம் பூதகணாதி சேவிதம்
கபித்த ஜம்பூபல சாரபக்ஷிதம்
உமா சுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்
அகஜர்னன பத்மார்க்கம் கஜானன மகர்நிஷம்
அநேகதந்தம் பக்தானாம் ஏகதந்தம் உபாஸ்மகே.

பந்த மகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்த மறை ஆகமங் கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழு கின்றோம். (01)



உலகம் முழுதும் நீக்கமற ஒன்றாய்
நிற்கும் பொருள் எவன் அவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம். (02)

இடர்கள் முழுவது மெவனருளால்
எரி வீழும் பஞ்சென மாயும்
தொடரு முயிர்கள் எவனருளால்
சுரர் வாழ்பதியும் உறச் செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கரும மெவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதி பொன்
சரணம் சரண மடைகின்றோம். (03)

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர்க் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தி னாலு முயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அறிவிப்பா னெவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரண மடைகின்றோம் (04)

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படுமப் பொருள் யாவன்
ஐய மின்றி உளதாகு
மந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவி
லூட்டி விடுப்பா னெவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரண மடைகின்றோம். (05)

வேத மளந்து மறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடனவிலும்
விமலன் யாவன் விறங்கு பர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாத னெவன் எண்குணனெவனப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரண மடைகின்றோம். (06)

மண்ணி னோரைங் குணமாகி
வதிவா னெவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வா னெவன் தீயின்
மூன்றாய் நவில்வா னெவன் வளியின்
எண்ணு மிரண்டு குணமாகி
இயைவா னெவன் வானிடை ஒன்றா
மண்ண லெவன் அக்கணபதியை
அன்பிற் சரணமடை கின்றோம். (07)

பாச வறிவில் பசுவறிவில்
பற்றற் கரிய பரன் யாவன்
பாச வறிவில் பசுவறிவும்
பயிலப் பணிக்கு மவன் யாவன்
பாச வறிவும் பசு வறிவும்
பாற்றி மேலா மறிவான
தேச னெவன் அக்கணபதியைத்
திகழச் சரண மடைகின்றோம். (08)

*காரியசித்தி மாலை முற்றிற்று.*



உ
*சிவமயம்*

## அன்னை சோதிப்பிள்ளையின் துயர்

பத்துமாதம் நான் சுமந்து
பெற்றெடுத்த பாலகனே!
சித்திரைப் பௌர்ணமியாய்ச்
சிரித்தாயே என் மடியில்.
இத்தரையில் பாலச்சந்
திரன் என்று நான் அழைக்க
சித்தமதில் ஒருவரில்லை.
பெத்தமனம் துடிக்குதடா!

## மனைவி வாசுகியின் துயர்

குடும்பத்தின் பெருந்தூணும்
குவலயத்தில் சரியலாமோ?
இடும்பை இதைப்போல
இந்நிலத்தில் துயருமுண்டோ?
கொடுங்காலன் பசும் பொன்னைக்
கொடுமையாய்ப் பறித்தனனே
சுடும் காடு என் மனதைச்
சுட்டே எரிக்கிறதே

## நண்பனின் துயர்

*அந்த நாள் ஞாபகம்......*
அந்த நாள் ஞாபகம் வந்ததே பால்ய நண்பனே!
இந்த நாள் அன்றுபோல் இன்பமாயில்லையே என எண்ண
நின் பிரிவால் வாடும் நின் உற்ற நண்பன்
நின் விதி வசத்தை எண்ணி ஏங்குகிறான்

கடந்த கால நினைவுகள் என் மனதில் தோன்றுதே நண்பா!
அந்த நாள் இனி எப்போ வருமோ என நினைத்து
வெதும்புகிறேன் நண்பா!
காலம் கணப் பொழுதில் கடந்ததே நண்பா அக்
காலனவன் கண்ணில் அது பட்டதே என் நண்பா!

விதிவசத்தால் ஒன்று சேர்ந்தோமே நண்பா - அவ்
விதிதான் நம்மைப் பிரித்ததே நண்பா நின் பிரிவால்
கதி கலங்கிப் போனனே நண்பா - அவ்விதியை
மதியால்தான் வெல்லலாமோ என் நண்பா:

சரவணன் - துபாய்



# கூடிப்பிறந்த குயிலே பறந்தாயோ

அப்பா, அம்மா என்ற ஆல விருக்ஷத்தின் கீழ் ஒன்றாய்க் கூடிக் களித்துக் குலாவி மகிழ்ந்திருந்தோமே அண்ணா இன்று எவர் கண் பட்டதோ..........? எம்மை யெல்லாம் தவிக்க வைத்து விட்டு எங்கே பறந்து சென்றீர்கள்?

முதிர்ந்த கிழம் இல்லையே.... நீங்கள்
மூச்சடங்கும் வயதில்லையே.....

எதற்காக இறைவன் உங்களை அழைத்தான் ......? ஏன் பிரிந்தீர்கள் எம்மை விட்டு ?

“அண்ணா” என்று பாசமுடன் நாம் அழைத்த அன்புச் சகோதரனே! எங்கள் என்பு ஒன்று கழன்று. வீழ்ந்தது போல் இதயமெலாம் வலிக்கத்துடிதுடித்து நிற்கின்றோமே..... ஏன் இந்த வேதனையோ....?

“ஆவதும் பரத்துளே..... போவதும் பரத்துளே.........” தெரியும் எமக்கு ... ஆனால்... இவ்வளவு விரைவாக உங்களை இறைவன் அழைப்பான் என்று நாங்கள் கனவு கூடக் காணவில்லையே.. அண்ணா! காலத்தால் கல்லறைக்குள் கரைந்து விட்டீர்கள்.... ஆனால்.. உங்கள் கோலமுகமும், கொஞ்சும் குமிண் சிரிப்பும் எங்கள் கண்களை விட்டு அகலாமல் கவலையில் கரைய வைக்கின்றதே! என் செய்வோம்...?

சின்ன வயது முதல் சுறு சுறுப்போடு, அனைவருடனும் அன்பாய்ப் பழகும் விதமும், கொடுக்குந் திறனும் உடையவராய்... எங்களுக்கெல்லாம் ஓர் முன்னோடியாய் வாழ்ந்தீர்களே! பெற்றோர்களிடத்தும், சகோதரர்களிடத்தும், குடும்பத்தாரிடத்தும் எத்தகைய அன்பைப் பொழிந்தீர்கள்... இதையெல்லாம் எண்ணும் போது..... ஏதோ ஒரு ஏக்கம் எம் நெஞ்சை அழுத்த ஏதும் செய்வதறியாமல்திகைத்து நிற்கின்றோம் அண்ணா! அப்பா அம்மாவுக்கு... இந்த வயதில் ... இப்படியொரு பிரிவைச் சந்திக்க இறைவன் வைத்து விட்டானே! உள்ளத்தில் எழும் வேதனையையும், உருகி வழியும் கண்ணீரையும் எம்மால் அடக்க முடியவில்லையே! ஆனால் ... நாமும் அடங்கும் வரை .... இந்த உடலில் உயிர் உள்ளவரை... அடக்கித் தானே ஆக வேண்டும். அதுவரை..........

உங்கள் அன்பு முகத்தை எங்கள் நெஞ்சில் நிலை நிறுத்தி, நினைவு மலரால் அஞ்சலி செய்து

*ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

***உங்கள்***
***உடன் பிறப்புகள்***

# THE GREATEST FATHER

Father, you are the Greatest! None of us would be where we are today if it had not been for your strength and determination to see us succeed in life.

During time of hardship and sorrow, you were the tower of strength, leading us step by step, without waver, to the light at the end of the tunnel.

We are forever grateful for the gifts of love understanding and patience you have showered up on us. Above all, the sense of discipline and values of life you have instilled in us will last till eternity.

You and Amma have overcome so many obstacles to give us a good life. We will always remember the pride you felt for our every achievement and that would be our reward!

Your last visit to America will forever be a cherished memory. You were so full of life and having you share my life here for a little brought me so much joy.

Appa, you are leaving a big void in our hearts. You will always be in our thoughts and prayers, Please continue to guide us and watch over us as always and remember, you, Father are the Greatest!

**SIVANDAN & VIDYA**
**U.S.A.**



# Dearest Daddy!

Oh Daddy! where do I start,
When I think of the days that have passed.

You were a simple man,
Who wanted things to fit your plan.
You had so much on your mind,
hardly having enough time,
Yet, you would still make time,
To teach me what was fine.

Of the many lessons you taught,
You taught me to defend what's right
And never back down from a fight,
So I learned the hard way to stand.
Still, with each lump, I found your hand.
Drawing from you an inner strength,
And stubborn pride of equal length.

Oh Daddy! The many things you've done,
Helps me know deep inside how much your really care.
You cared for me so dearly,
tears run down as I reflect so clearly

Oh Daddy! Now that you are gone,
Your memory will live forever on..........

***Sharmila Kiruparan***
**Singapore**

## MEMORIES OF MY CHILDHOOD HERO

Overcoming my initial and overwhelming sorrow, I wanted to pen down the thoughts of my father and reflect on the special moments and memories in my life that will never change.

Daddy has been a father, a best friend, a mentor and always on my side despite right or wrong; Never forcing me into doing deeds that I disliked, he always richly rewarded me with love, enthusiasm, passion encouragement and last but by no means least.... Lots of gifts! I would be untruthful if I were to say he never spoilt me, however his inadvertent way of spoiling me resulted in my growing love and respect for him which in turn made me a better person, It gives me a great sense of joy to realize he has demonstrated me, through the manner in which he cared and provided what I regard as the ideal example for his future grandchildren.

My ultimate dream would be at least to be able to have a fraction of his warm and gentle character. Being born as his daughter; I regard as one of the best things that have happened to me and I would always carry a large part of him in my heart.

These memories I hold so dear to me and the cherished moments of the past all add up to the invaluable treasures I possess for life. They will always be in my heart, today and forevermore. I love you Daddy.

*Loving Daughter & Son-in - law*
**Sinthuja & Rajiv Dharmendra**



## A CANDLE FOR PERRIAPPA

This memorial book is in remembrance of a special person in our lives and a compilation of meaningful experiences of love and friendship for his family. The shock of our sudden loss has been made greater by the fact that Perriappa was still relatively young and left us so unexpectedly. I hope that, wherever he is, he has found a deep and profound peace.

Being the same age group as his children, I spent a lot of time with my Perriappa during my schooling days. As a father, he set an example that all of his children can look to with pride and strive to achieve. As an uncle, he was a playmate for all his nieces and nephews. The fondest memory I have with him is our outings to the beach, and playing Monopoly when he would just be a kid like all of us. But I think what I will remember most about him are his strength of character and candid sense of humour.

Perriappa was a warm, compassionate and wonderful person. He had a fine sense of humour and liked to do things his way, he is strong willed and as his family know, if he had made up his mind about something, there was no changing it. This is how I like to remember my Perriappa as, before his illness slowly started taking its toll in 2000.

For his family, a mixture of emotions, firstly, a certain relief Perriappa no longer has to suffer, that the on going grief at watching his health deteriorate is now over, but at the same time, grief in

their loss. No matter how much we want the pain to finish and death to bring peace, we are never really completely prepared for the finality of the separation when a loved one dies.

Perriappa was always full of life and I guess that is why it is so hard for me and for everyone else to believe that he is no longer with us. However, the influence of his personality, character and deeds will live on in our acts and thoughts. We will remember him as a living vital, presence. Those memories are tokens of a great gift, a life that has been shared.

**Subathra Sivaanujan**
***Perth***
***Australia.***



*Aum Sai Ram*

## BALA PERIYAPPA

My favourite uncle is Bala Periyappa. Many a things he did for me which I can never ever forget. He used to take me out very often. I've used to go to the beach and the shops. Whenever he goes shopping he comes home and takes me there. And the people would ask him if I was his child and he says "Yes" with full of fatherly love. I used to await for X' mas and he gives toys. I yet treasure some of them, and his memory is still in my mind.

I was very sad because he could not walk and I thought that I can help him when I grow. Unfortunately I did not get that great chance he passed away a few days ago.
He still lives in my heart.

Sweet dreams of my **Balaperiyappa** will always stay in my heart eternally.

**SOWMIYA GNANACHANDRAN**

# මා දුටු බාලචන්ද්‍රන් මහතා

1982 වර්ෂයේ සිට ඔබ ආයතනයේ සේවයට බැඳුන මම අද වන තුරු මෙහි රැඳී සිටිනුයේ ඔබ තුල තිබූ නියම මහත්මා ගතියත් නිහතමානි ගුණයක් නිසාය. ඔබගේ සේවකයන් අතුරෙන් අවංකම සිටි අයත් එසේ නොවන අයත් හඳුනා ගැනීමේ පුදුම හැකියාවක් ඔබට තිබිණි. මා ඔබෙන් ඉගෙන ගත් දේ බොහෝය. සැලැස්මක් අනුව වැඩ කිරීමත්, ඕනෑම වැඩකදී පෙර සූදානමක් තිබීමත් ඉන් සමහරක්ය. ඔබ නීති ගරුක විය වාහනයක් පදවන විට මාර්ග නීතිය අතුරට පිලිපැද්දේය. යුක්ති ගරුක විය කළ යුතු යුතුකම් සේවකයන් වන අපහට නෙපිරිහෙලා ඉටු කලහ. කිසි දිනෙක අප ගේ සිත් රිදෙන සේ කිසිවක් කියා නැත. ඕනෑම දෙයක් හොඳින් කරුණු පහදා දීමේ හැකියාවක් ඔබට තිබිණ. මගේ ජීවිත කාලයටම හමු වූ මා ආදරය කල මිනිසා ඔබය. අප නොසිතූ නොපැතූ මොහොතක ඔබ අපෙන් වෙන් විය. එය අපගේ අවාසනාවය දෙවියන් වන්නේ ඔබ වැනි මිනිසුන්ය.

මගේ පැතුම ද එයයි.

*දිලිප් සිල්වා*
*ආරක්ෂක අංශය*
*කල්කි ඉම්පෙක්ස්*



# அஞ்சலி

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்"*

எனும் குறளின் பொருளாய் வாழ்ந்து, வர்த்தகத்துறையில் பௌர்ணமி முழுநிலவாய்ப் பேரொளி பரப்பவேண்டிய நம் நிறுவனத் தலைவர் பாலச்சந்திரனாய் மறைந்து விட்டார் என்பது எமது உள்ளத்தை அடைத்து விட்ட துயர்ச் செய்தியே. மறைந்து மாதமொன்று ஓடிவிட்டபோதும் நமது மனதை விட்டு மறையாது அவரது நினைவுகள்.

கல்கி இம்பெக்ஸ் நிறுவனத் தலைவரும் இயக்குனருமான அவரிடம் பணியாற்றியது ஓராண்டு காலமே, ஆனபோதும் அது எமது தொழிற்றுறை வாழ்க்கையைப் பல்லாண்டு காலம் வழி நடத்தும் என்றால் மிகையில்லை. கட்டளைகள் இடாமல் கடிந்துரைக்காது எமது பணிகளில் தலையிடாமல் பார்வையாலும் ஒரு சில வார்த்தைகளாலும் எம்மைத் திறம்படப் பணியாற்ற வைப்பது நமது தலைவரின் தனிப்பாணியே. அவரது வழிநடத்தலில் இன்னும் சிலகாலங்களேனும் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டாது போனது எமது பொருத்தமற்ற காலமே அவரிடம் நீண்டகாலம் பணியாற்றியோர் பார்வையில் அவர் மிகநல்லவர், வல்லவர், அண்டிவந்தோரை அரவணைத்து வாழவைத்த வள்ளல் குணம் படைத்தவர்.

இல்லத்தலைவனாய் அவரது வாழ்க்கை வாழும் வழிமுறைக்கு ஓர் உதாரணமாகும். பணம் படைத்தவர், அதேவேளை நல்லமனம் படைத்தவர் என்பதாலேயே. இனிய குடும்ப வாழ்க்கையில் அவரால் வெற்றி பெறமுடிந்தது. அவரது சமத்துவ சமூகசிந்தனையின் வெளிப்பாடே இன்று எமது நிறுவனத்தை வழிநடத்த வல்லமைமிக்க தலைவியை எமக்குத் தந்துள்ளது.

கல்கி இம்பெக்ஸ் நிறுவனத்தாபகராய் அவர் ஆற்றிய பணிகளால் வளர்ச்சி பெற்ற நிறுவனம் எதிர்காலத்தில் மேலும் பல வளர்ச்சிப் படிகளைக் காணும். எமது தலைவர் தோன்றாத்துணையாய் எம்முடன் வாழ்ந்து வளம் பல தருவார் என்பது எமது நம்பிக்கை. அவர் ஆத்மா சாந்தி அடைய வேண்டும் என ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

மாதுரிபாலன்
கல்கி இம்பெக்ஸ் ஊழியர்

உ
சிவமயம்

# இதய அஞ்சலி

வாழ்க்கை என்பது வியாபாரம். அதில் வரவு என்பது பிறப்பு செலவு என்பது இறப்பு, இது ஒன்றே நிலையானது நித்தியமானது. இதனை நன்குணர்ந்து வாழ்ந்தவரே எங்கள் பெரும் அன்புக்கும், மதிப்பிற்கும் உரிய "ஐயா" அமரர் திரு.சின்னத்துரை பாலச்சந்திரன் அவர்கள். அன்பாலும், பண்பான நடத்தையினாலும், தயை குணத்தினாலும் எல்லோர் மனங்களையும் கொள்ளை கொள்வதில் வல்லவர் என்றால் அது மிகையில்லை. ஊழியரையும் உற்ற நண்பராய் மதித்து நடக்கும் ஒரு சிறந்த முகாமையாளர். மற்றவர் வாழ்வும் வளம்பெற வாரிக் கொடுக்கின்ற வள்ளலாக வளங்கியவர். கடமையுணர்வும், கண்ணியமும் நிறைந்த நிறுவனத் தலைவராக இருந்து எம்மை எல்லாம் விழிநடத்திய பெருந்தகையோன் எங்கள் "ஐயா" அவர் அடியில் பணிசெய்தமை நாம் செய்த பாக்கியமே.

அன்னாரின் மறைவு எங்கள் இதயங்களில் எண்ணிலடங்கா வேதனையைத் தருகின்றது. அவர் பிரிவால் துயருறும் குடும்பத்தார் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை மனதார பிரார்த்திக்கின்றோம்.

"ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதம் கச்சி ஏகம்பனே"

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இவ்வண்ணம்
கல்கி நிறுவன ஊழியர்கள்

79, மெசஞ்சர் வீதி,
கொழும்பு. 12



# බාලචන්ද්‍රන් මහාතාණනි

25 වසරක කාලයක් ඔබ තුමාගේ නිවසේහි සිටින මා ඔබගේ හිත දිනා ගනිමින් සේවය කලෙමි. ඔබ මට දරුවකුට මෙන් සලකා ඇත. මෙපමණ කලක් ඔබ නිවසෙහි සිටි මට ඔබගේ යහපත් ගතිගුණ හේතුවිය.

හදිසියේ ඔබ අසනිප වීම මට දරාගත නොහැකි විය. එහෙත් මා ඔබ ලගින්ම සිට ඔබට සැලකුවේ මගේම පිෂ්‍යකුට සේ එසෙය.

එහෙත් මමත් නොදැනෙන සේ ඔබ අප අත හැර ගියේය. මට දැන් මහත් පාලුවක් දැනේ මා හිත සාදා ගනිමි. ඒ ඔබගේ දයාබර නෝනාටත් දරුවන්ටත් මට කල හැකි දෙයක් ඇත් නම් එය කිරිමටය.

චන්දන

கொழும்பு கல்கி இம்பெக்ஸ் லிமிடெட், கொழும்பு பெஸ்கோட்

லிமிடெட், ஆகிய பெரும் வர்த்தக நிலையங்களின் அதிபரும்,

யாழ்ப்பாணம், கொழும்பு சின்னத்துரை அன்ட் பிரதர் கல்கி

நிறுவனங்களின் ஸ்தாபகரும், பிரபல வர்த்தகருமான இணுவில்

ஸ்ரீ சின்னத்துரை, சோதிப்பிள்ளை தம்பதிகளின்

சிரேஷ்ட புத்திரனும்,

பிரபல தொழிலதிபர் புன்னாலைக் கட்டுவன்

ஸ்ரீ இராஜரத்தினம் பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும்,

வாசுகியின் அன்புக் கணவருமான

# ஸ்ரீ சின்னத்துரை பாலச்சந்திரன்

## அவர்களின்

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனைப் பாடல்கள்

1. பூந்தமிழும் பொலிசைவம் ஓங்கும் நாடாம்
        புகழ்பூத்த இணுவைநகர் ஐங்க ரனாம்
    காந்தமிகு பரராஜ சேக ரனாம்
        கணபதியின் தாளிணைகள் போற்றும் அன்பன்
    சாந்தமிகு சின்னத்துரை சோதிப் பிள்ளை
        சராசரத்தில் ஈன்றபாலச் சந்தி ரனும்
    [illegible]வன் சிவபதத்தைச் சேர்ந்த னனே
        [illegible]த்மா இறைபதத்தில் பெறுக சாந்தி!

✧ ✧ ✧



2. வர்த்தகமாம் கலைவல்லான் பாலச் சந்திரன்
        வளம் நிறைந்த வர்த்தகச் ஸ்தாப னத்தின்
    கர்த்தாவாய் காசினியில் சேவை செய்தான்
        கல்கியாம் நிறுவனத்தின் அதிப னானான்
    நர்த்தகனாம் சிதம்பரத்து நடரா ஜனின்
        நளினமலர்ப் பதம்மறவான் பாலச் சந்த்ரன்
    அர்த்தநா ரீச்சரனாம் சிவன் பதத்தை
        அடைந்தனனே அவனாத்மா பெறுக சாந்தி!

✧ ✧ ✧

3. தேசுநிறை முகத்தழகன் பாலச் சந்திரன்
        தெய்வீக பக்தியது நிறைந்த நெஞ்சன்
    வாசுகியாக பத்தினியின் மணாள னானான்
        வாழ்வினிலே சிவந்தன் ஷர்மி ளாவும்
    பாசமிகு சிந்துஜா ஆகிய
        பாலகரின் தந்தையானான் பாலச் சந்திரன்
    நேசமிகு உறவினர்உற் றார்க தற
        நிமலனடி சேர்ந்தனனே பெறுக சாந்தி!

✧ ✧ ✧

4. அன்பான சோதரன் புவனச் சந்திரன்
        அதிஇளைய சகோதரன் ஞானச் சந்திரன்
    பண்பான சோதரியர் சிவம லரும்
        பாசமிகு வசந்தமலர் இந்து மலர்
    நின்பாச விமலா ஷண்முகரத் தினம்
        கனேந்ரன் ஸ்ரீஸ்கந்தராஜா ஜெயந்தி
    இன்பாச வரதராஜா வத்ஸலா
        இனியமைத் துனன்ஆத்மா பெறுக சாந்தி!

✧ ✧ ✧

5. மருமக்க ளானவித்யா கிருபா கரன்
மாமனார் விரும்புரஜீவ் தர்மேந் திரா
பொருமியழ பாலச்சந் திரமா மாதன்
பிரிவினால் ஏங்கிவிழி நீர்சொ ரிய
அருமையாம் நின்மாமன் ராஜ ரத்னம்
அரும்மாமி நின்பிரிவால் துடிது டிக்க
இருநிலம்விட் டேகினையே பாலச் சந்திரா!
இறைசிவனின் பதத்தினிலே பெறுக சாந்தி !

✧ ✧ ✧

6. வனஜா ராமலிங்கம் தேம்பி யழ
வத்ஸலா கருணாகரன் வாய்விட் டழ
நினதன்பு வசந்தியொடு பெரிய தம்பி
நெஞ்சமது துடிதுடிக்க வளர் மதியும்
மனமாரப் பொங்கிஅழும் செல்லப் பாவும்
ரஜீவொடு கமலராஜா தேம்பி யழ
நினதாசைப் பேரர்பூ ஜிதா துவாரகேஷ்
நின்முகம் காணுவரோ பெறுக சாந்தி!

✧ ✧ ✧

7. உன்இனிய முகத்தைநாம் இனிக்காண் போமோ
உலவிவரும் புன்சிரிப்பை இனிப்பார்ப் போமோ
அன்பினிக்கும் மொழிக்குரலை இனிக்கேட் போமோ
ஆசையுடன் பேசுகின்ற மொழிகேட் போமோ
நின்பிரிவால் நெஞ்சமது குமுறு தையோ!
நீணிலத்தில் என்றுதான் உனை நாம் காண்போம்
அன்பினிலே பழுத்தபழம் நீயு மானாய்
ஆத்மாவும் சிவபதத்தில் பெறுக சாந்தி!

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

*ஆக்கம்:* மஹாவித்துவான் - வீரமணிஐயர்

*இங்ஙனம்*
இணுவையூர் மக்கள்



# மழலைத் தமிழ் அமுதம்

யாழ் இணுவில்

**சின்னத்துரை பாலச்சந்திரன்**
**அந்தியேட்டித்தின வெளியீடு**
**2003-04-12**

உ
சிவமயம்

# இறைவன்

– சைவப் புலவர் திருமதி இரத்தினம் அப்புத்துரை –

இறைவன் எங்கள் தலைவன்
எல்லோருக்கும் அருள்வன்
மறைவென்றெதுவும் இல்லை
மகிழ்வாய் எங்கும் உறைவன்

ஓடும் நீரும் அவனே
உலவும் உயிரும் அவனே
காடுஞ் செடியும் அவனே
கமலத்தழகும் அவனே.

அருணன் இயக்கத்துணர்வோம்
அழகுப் புவியிற் காண்போம்
பருவ மழையிற் பார்ப்போம்
பணிந்து வணங்கித் தெளிவோம்

அன்பே அவன்தன் வடிவம்
அருளல் அவனுக்கியல்பாம்
இன்பம் துன்பம் எல்லாம்
எமது தேட்டம் என்போம்

# அப்பா

– கவிஞர் த. துரைசிங்கம் –

அப்பா மிகவும் நல்லவராம்
அன்பு காட்டி அணைப்பவராம்
எப்போதும் அவர் என்மேலே
இரக்கம் காட்டும் அப்பாவாம்

பள்ளிக்கென்னை அனுப்பிவைத்துப்
படிக்கப் புத்தகம் தந்திடுவார்
தேடி உடுப்புகள் எந்தனுக்குச்
சிறக்க உடுத்துப் பார்த்திடுவார்

உழைத்து வேண்டும் பொருள்களையே
உடனே கொண்டு வருவாரே
களைத்து மிகவும் இருந்தாலும்
கண்ணன் என்னை மறவாரே

சீருஞ் சிறப்பும் தந்தென்னைச்
சிறக்க வைத்தார் உலகத்தில்
பேரும் புகழும் பெற்றிடுவேன்
பெரிதும் அவரைப் போற்றிடுவேன்

*நன்றி: பாடு பாப்பா - 1998*



# உயிராம் அம்மா

– ஆடலிறை –

என்னைப் பெற்றாள் அம்மா
என்னை வளர்த்தாள் அம்மா
என்னை உயிராய் எண்ணி
என்றும் காத்தாள் அம்மா.

உண்ண உணவு தருவாள்
உறங்கப் பாட்டுப் படிப்பாள்
வண்ண வண்ணச் சட்டை
வாங்கித் தந்து மகிழ்வாள்

ஆனாக் கானாச் சொல்லி
அழகாய் எழுதச் செய்வாள்
தேனாய்ப் பாட்டுப் பாடத்
தினமுஞ் சொல்லித் தருவாள்

அப்பா அம்மா தெய்வம்
அவரை என்றும் மறவோம்
தப்பா தென்றும் அவரைத்
தானே நாங்கள் தொழுவோம்

*நன்றி: இணுவில் திருமதி சந்திரா பரமேஸ்வரன்*
*நினைவு மலர் - 1990*

# துள்ளி ஓடும் வெள்ளைக்கன்று

*- சைவப் புலவர் திருமதி இரத்தினம் அப்புத்துரை -*

துள்ளித் துள்ளி ஓடுகின்ற
வெள்ளைக் கன்று அம்மா - அதை
மெள்ள ஓடிப் பிடிக்க எனக்குக்
கொள்ளை ஆசை அம்மா

பஞ்சு போன்ற உடலைத் தடவக்
கெஞ்சு தம்மா நெஞ்சு - அதைக்
கொஞ்சிப் பேசிக் கதைகள் கூறக்
கூப்பிட டட்டா அம்மா

புல்லைத் தினமும் பிடுங்கி அதற்குப்
போடுகின்றேன் அம்மா - அதை
மெல்ல உண்ண வேண்டு மென்று
சொல்லிடுங்கோ அம்மா

நெட்டை யான கொம்பி ரண்டு
நீண்டு நிற்கு தம்மா - அதைத்
தொட்டுப் பார்க்கக் கூட எனக்குத்
துணிவு இல்லை அம்மா

கல்லும் முள்ளும் போடமாட்டேன்
கடவுளாணை அம்மா - அதைப்
புல்லு மேயக் கொண்டு போக
விட்டிடுங்கே அம்மா



# பாப்பாவும் பாட்டியும்

*- கலாநிதி என் சண்முகலிங்கன் -*

காலைக் கட்டித் தூரத்தள்ளிக்
கன்றுக் குட்டி கத்தவே
பால்கறக்க வென்று பாட்டி
ஆவலோடு குந்தினாள்

கன்று கத்தி அழுத ஓசை
காதினுள் விழுந்ததும்
நன்று பால் குடித்திருந்த
நமது தம்பி கதறினான்

பால் குடிக்க மாட்டேனென்று
படுத்திருந்து அழுதவன்
பால்கறந்த பாட்டி மீது
பாசமில்லை என்றனன்

பாட்டி ஓடிச் சென்று கன்றைப்
பால் குடிக்கச் செய்தனள்
பாட்டி அச்சாப் பாட்டியென்று
பாடிப் பால் குடித்தனன்

*நன்றி: சந்தன மேடை 1992*

## பட்டுப் பொம்மைப் பூனையார்

–வை. சுந்தரரேசன் –

எங்கள் வீட்டுப் பூனையார்
எலிபிடிக்க மாட்டாராம்
பால் குடிக்கத் தெரியாதாம்
பரணில் ஏற அறியாராம்

வண்ணப் பட்டி கழுத்திலே
வகையாய்ச் சுற்றித் தொங்கவே
சின்னத் தங்கை மடிமீதில்
செல்வமாகத் தூங்குகிறார்

சாவி கொடுத்தாற் சட்டென்று
தலையைச் சாய்த்துப் பார்க்கின்றார்
அம்பி கண்டு களித்திடுவான்
அழுகை தணிந்து சிரித்திடுவான்

சீமை சென்ற சின்னமாமா
திரும்பி வருகையில் வாங்கிவந்த
பஞ்சாற் செய்த பூனையார்
பட்டுப் பொம்மைப் பூனையார்

நன்றி: பிள்ளைப் பாமலர் - 1998

## சிரிப்பு

கல்வயல் வே. குமாரசாமி –

அரிசிக் காகம் கரைகிறது
ஆரோ
வரப் போகினம் என்று
பெரிதாய் அம்மா
சொல்லுகின்றா
பெரியண்ணாவோ ஓடிப்போய்
தெருவைப் பார்த்துக்
காணாமல்
திரும்பிவர நாம் சிரிக்கின்றோம்

அண்டம் காகம் கரைகிறது
ஆரோ போகப் போகினமாம்
என்றோ பாட்டி
சொல்கின்றா
எல்லோரும் நாம்
சிரிக்கின்றோம்.

நன்றி: பாப்பாய் பாடல்கள் - 1995

# நிலவு

– சிதம்பரபத்தினி

வள்ளி வள்ளி அங்கேபார்
வெள்ளி ஓடம் செல்லுதுபார்
தள்ளித் தள்ளி அதுமெல்லத்
தங்கித் தங்கிப் போகுதுபார்

நீலக் கடலின் ஓரத்தில்
பாலைப் போலே ஒளிவீசிக்
கோலக் காட்சி குலவிவரும்
காலையி லெங்கது சென்றிடுதோ

சத்தம் சிறிதும் போடவிலை
சற்றுந் தவறி ஓடவிலை
இயக்கும் மனிதன் யாருமிலை
இன்பமாக ஓடுதுபார்

அந்திப் பொழுதிற் புன்னகையாம்
அழகு நிலாவைப் பொழியுமடி
பந்தைப் போல மூழ்கிவரும்
விந்தையான ஓடமிது

*நன்றி: மழலை அமுதம் - 2001*



# பாசம்

– கதிரேசன் –

பாலன் என்ற பையனுக்குப்
பாட்டி பணம் தந்தாள்
பாலன்கடைக் கோடிவடை
வாங்கிக் கொண்டு வந்தான்

கொண்டுவந்த வடைதனிலே
கொஞ்சங்கிள்ளித் தின்றான்
கண்ட தங்கை ஓடிவந்து
கையைநீட்டி நின்றாள்

பங்கிடுவான் போலதனைப்
பாதியாக்கிக் கொண்டான்
தங்கைக்கொரு பாதியென்று
சொல்லியொன்றை உண்டான்

மற்றப்பங்கை வாங்குதற்குத்
தங்கைகரம் நீட்டப்
பற்றில்லாத பாலன்நீட்டிக்
கொடுக்காதேய்த்துக் காட்ட

பையனது வஞ்சனையைப்
பார்த்தவொரு காகம்
கையைக் கீறி வடையதனைக்
கௌவிக்கொண்டு போக

கையிற் காயம் கண்டுபாலன்
கண்கலங்கி நின்றான்
ஐயையோவென் றழுதுதங்கை
அவனைத் தேற்றி நின்றான்

*நன்றி: மழலைச் செல்வம் - 1964*

# நல்ல இதயம்

– கூடல்நாடன் –

முறுக்கைக் கையில் ஏந்தியே
முந்தி வந்த போதிலே
சறுக்கி விழுந்து விட்டனள்
தங்கை சார தாமணி

பொறுத்து நின்று பார்த்தனன்
புத்தி உள்ள தம்பியாம்
கறுத்த மேனி உடையவன்
காந்தி என்னும் பெயரினன்

மல்லி கைப்பே ருடையவள்
மாமி வீட்டில் இருப்பவள்
சொல்லிடாமல் வந்தனள்
துரிதமாயப் பாதையில்

புல்லி அவளை தூக்கினாள்
புறத்தே நின்ற காந்தியும்
நல்ல இதயத்தோடுமே
நண்ணி வந்தங்குதவினான்

*நன்றி: மழலைச் செல்வம் - 1964*



# அம்மா பாடும் பாட்டு

– ச. அருளானந்தம் –

சின்னச் சின்னப் பாட்டு - நாம்
சேர்ந்து பாடும் பாட்டு
அன்பைக் கூறும் பாட்டு - நல்
அறிவை ஊட்டும் பாட்டு

ஆடிப் பாடும் பாட்டு - அம்மா
அணைத்துப் பாடும் பாட்டு
கூடி மகிழும் பாட்டு - நம்
குணம் வளர்க்கும் பாட்டு

திருக் குறளை ஓதும் - அதில்
சிலம்புக் கதை மோதும்
தரும நெறு பாடும் - மனச்
சாந்தி வந்து கூடும்

தேடித் தெய்வம் வாழ்த்தும் - நம்மைத்
தீந்தமிழில் ஆழ்த்தும்
பாடிப் பாடி மகிழ்வோம் - அன்னை
பாட்டைப் பாடி வாழ்வோம்

*நன்றி: மனதுக்கினிய பாட்டு- 2001*

# காகமும் நரியும்

– அம்பி –

பாட்டி சுட்ட வடையைத் தூக்கிப்
பறந்து சென்ற காக்கையார்
நாட்டில் உள்ள மரத்தின் மீது
களைத்து வந்து குந்தினார்

வாட்டு கின்ற பசியில் அங்கு
வந்து நின்ற நரியனார்
பாட்டுப் பாட வல்ல மச்சான்
பாடு பாடு என்றனர்

சால வித்தை என்ன என்று
தான் அறிந்த காக்கையார்
காலில் அந்த வடையை வைத்துக்
காகா என்று பாடினார்

தன்னைக் காக்கை வென்றதென்று
தலைகுனிந்த நரியனார்
என்ன செய்வோம் என்று வெட்கி
எடுத்தார் ஓட்டம் காட்டிலே.

*நன்றி: அம்பிப் பாடல் - 1969*



# குறள் எனும் அறநூல்

– கூடல்நாடன் –

திருக்குறளைநாம் படித்திடுவோம்
தினமொரு குறளைத் தேர்ந்துகொள்வோம்
விருப்பொடு அதனை மனத்திருத்தி
வேண்டிடும் போதிற் சொல்லிடுவோம்

அறநெறி பற்றி அதுசொல்லும்
அதன்வழி அறநூல் எனலாகும்
புறமுரை நானூறற மென்றே
புனிதமாய்க் குறளைப் போற்றியது

பொதுமறை என்று திருக்குறளைப்
போற்றினர் புனித உணர்வுடையோர்
எதுவுமே உண்டாம் அந்நூலில்
என்று முயர்வாய்ப் பேசுவரே

வள்ளுவன் சொல்லே வேதமென
வழிபடு நிலைக்கு வழிப்படுத்தும்
தெள்ளுதமிழ்ப்பா கேட்டதுண்டு
தெளிவுடனேநாம் போற்றுவமே.

# ஆகாயவிமானம்

– சிதம்பரபத்தினி –

பளபளவென்று வெள்ளித்தட்டுப்
பட்டம் போலப் பறக்குதுபார்
பருந்துபோல வட்டம் போட்டு
மெல்ல மேலே எழும்புதுபார்

பறவை போல·இரண்டு பக்கமும்
சரிந்து சரிந்து செல்லுதுபார்
கரியபெரிய முகிலைக் கடந்து
மேலே கிழித்துச் செல்லுதுபார்

கருமை வெண்மைப் பஞ்சினூடே
உயர உயரப் பறக்குதுபார்
காததூரம் சென்று களைத்துப்
படபட என்று இறங்குதுபார்

ஒளவைப் பாட்டி சுகத்தைப் பார்க்கச்
சந்திர மண்டலம் போனதுவோ
செவ்வாய்க் கிரகம்சென்று பார்த்துக்
குடியிருக்க இடம் தேடியதோ

*நன்றி: மழலை அமுதம் - 2001*



# தங்கத்தாத்தா

– ஆடலிறை –

தமிழைப் படித்துக் கவிதை சொல்லித்
தந்த நல்ல தாத்தா
அமிழ்தைப் போலக் கதைகள் கூறி
அருள்பரப்புந் தாத்தா

தங்கமென்னும் பெயர் படைத்த
தாயின் நாட்டில் வந்து
எங்கும் புகழை நாட்டி நின்ற
எங்கள் தாத்தா வாழி

ஆடு கோழி வெட்டுங் கொடிய
அன்பில் செயலைக் கண்டு
கூடுந் துயரங் கொப்பளிக்கக்
கொதித் தெழுந்த தாத்தா

தாடி அறுந்த வேடன் கதையும்
தடித்த சாதி மானாம்
கோடியுடைய முதலி கதையும்
கொள்ளை இன்பங் குலவும்.

*நன்றி: மழலைச் செல்வம்- 1964*

## பாட்டி அழுகின்றாள்

– இர சிகமணி கனக. செந்திநாதன் –

சிறிய பூச்சி பிடிக்கவே
பெரிய பல்லி ஊர்ந்தது

பெரிய பல்லி பிடிக்கவே
கரிய பூனை பதுங்கிற்று

கரிய பூனை பிடிக்கவே
வெள்ளை நாயும் பாய்ந்தது

வெள்ளை நாயைத் துரத்தவே
மெள்ளப் பாட்டி எறிந்தனள்

பாட்டி எறிந்த தடியினால்
பானை சட்டி உடைந்ததே

காட்டிக் காட்டி அழுகின்றாள்
கவலை தீர்ப்பார் இல்லையே.

*நன்றி: சின்னவீரன் - 2001*



## தேயிலை தரும் தேநீர்

– புலவர் த. கனகரத்தினம் –

உச்சிமலைத் தோட்டத்தில் - உயரப்
போகும் முத்தம்மா
குச்சி மிலாறு ஒடித்திடுவாய் - உன்
குசினி அடுப்பினுக்கே

பச்சை மலைதாண்டித் - தேயிலை
பறிக்கும் முத்தம்மா
மெச்சும் தொழில் செய்வாய் - மேலாம்
செல்வம் உனதுழைப்பே.

கொழுந்து பறித்துவர - உன்
கூடை நிறைந்து விடும்
அழுத்தும் இயந்திரமும் - தேயிலை
அரைத்துக் கொடுத்து விடும்.

மண்ணின் குடமெடுத்து - மலைமேல்
தண்ணீர் எடுத்து வந்தே
வண்ண அடுப்பேற்றித் - தேயிலை
கொதிக்க வைக்கத் தேநீராம்.

பானமாய்ச் செய்திடுவாய் - தேநீர்
பதமாய்ப் பருகிடுவோம்
சீனிபால் கலந்துவிட்டால் - நன்றாய்த்
தித்திக்கும் பானமன்றோ

*நன்றி: சிறுவர் பாடல் -1991*

# எறும்புகள்

–கவிஞர் த. துரைசிங்கம் –

சின்னச் சின்ன எறும்புகள்
சீனி தின்னும் எறும்புகள்
வன்ன வன்ன எறும்புகள்
வடிவான எறும்புகள்

ஒன்றின் பின் ஒன்றாக
ஊர்ந்து வரிசை சென்றிடும்
புதிய பாதை காட்டிடும்
புற்றில் உணவைச் சேர்த்திடும்

சோம்பல் தன்னைப் போக்கிடும்
சுறுசுறுப்பாய் உழைத்திடும்
உண்ணும் உணவைச் சேர்த்திட
ஊக்கத்தோடு முயன்றிடும்

சின்னச் சின்ன எறும்புகள்
செயலிற் காட்டும் வீரத்தை
எண்ணி எண்ணி நாங்களும்
ஏற்றங் காண முயலுவோம்

நன்றி: பாப்பாப் பாட்டு - 2000



# பட்டம்

– கல்வயல் வே.குமாரசாமி –

நூலில் ஏற்றி
விட்ட பட்டம்
வாலை வாலை ஆட்டுது

மேலே மேலே
ஏற ஏற
நூலை நூலை இழுக்குது.

முச்சை கட்டி
விட்ட பட்டம்
உச்சி உச்சி ஏறுது

பச்சை நிறமோ
நீல வானப்
பந்தலுக்குள் போகுது.

நன்றி: பாப்பாப் பாடல்கள் - 1995

# மாலைக்காலம்

– பண்டிதர் க. மயில்வாகனம் –

மாலை வந்தது மாலை வந்தது
மாலை வந்ததடா
மேலைக் கடலில் கதிரும் மூழ்க
மாலை வந்ததடா

பட்சி சாலம் கூட்டை நாடிப்
பறந்து செல்லுதடா
எட்டுத் திசையும் மெல்ல மெல்ல
இருள் பரவுதடா

அந்தி மலர்கள் அவிழ்ந்து நின்று
ஆசை காட்டுதடா
கந்தன் கோயில் மணியின் ஓசை
காதில் கேட்குதடா

கறவை மாடு குரலெழுப்பிக்
கன்றைத் தேடுதடா
உறவு கொண்ட கூட்டை எண்ணிக்
குருவி பறக்குதடா

அம்மா தீபம் ஏற்றி வைக்க
அப்பா பாடுகின்றார்
கம்மென் வாசம் எழுந்து எங்கும்
கலந்து நிற்குதடா

*நன்றி: இன்பத் தமிழ்ப் பாடல்கள் 1988*



# உயிருக்காக

–பா சத்தியசீலன்–

காட்டில் நுழைந்த வேட்டைநாய் ஒன்று
புதருக் குள்ளே தலையை் விட்டது,

பதுங்கி இருந்த குறுமுயல் ஒன்று
பயந்து வெளியே பாய்ந்து வந்தது,

விட்டே னோபார் என்று சொல்லி
வேட்டை நாயார் விரட்டிய போதும்
எப்படி யோமுயல் தப்பிக் கொண்டது,

ஓட்டப் போட்டியைப் பார்த்த வேடன்
உன்னிலும் முயலே ஓட வல்லவன்
என்றுதன் நாயை ஏழனஞ் செய்தான்

அந்த நாயோ அவனைப் பார்த்து
எஜமான் சொன்னது சரியே யெனினும்
நான் ஓ டியதோ உணவுக் காக
முயல் ஓ டியதோ உயிருக் காக
என்று கூறி வென்றதே தப்பி

*நன்றி: சின்ன் வீரன் 2001*

# மல்லிகை

—பண்டிதர் வே. சண்முகலிங்கம் —

வட்ட வட்ட மல்லிகை
வாசமுள்ள மல்லிகை
எட்டுத் திக்கும் வாசனை
இறைத்து வீசும் மல்லிகை

பட்டுப் போன்ற மல்லிகை
பந்தல் மீது மல்லிகை
கட்டி நல்ல மாலையாய்
கடவுளுக்குச் சூட்டலாம்.

வட்டமான மல்லிகை
வண்டு மொய்க்கும் மல்லிகை
பட்டுப் போன்று தொட்டவர்க்குப்
பவள வண்ண மல்லிகை.

சுட்ட சங்கைப் போன்றிருக்கும்
தூய வெள்ளை மல்லிகை
மொட்டெடுத்து மாலைகுட்டிக்
கொண்டையில் நாம்சூடலாம்.

விந்தையாக விண்ணிலே
விளங்கும் வெள்ளி போலவே
எந்த நாளும் பூக்குமே
எண்ணிப் பார்க்க முடியுமா?

நன்றி: மழலைச் செல்வம் - 1964.



# சின்ன வீரன்

— யாழ்ப்பாணன்—

நானோர் சின்ன வீரன் தானே.
எனது திறமை கேளடி மானே.

ஓட்டைப் பானை ஒன்றைக் கண்டேன்
உள்ளோர் எலியும் நுழையக் கண்டேன்.

பானையுட் கையை விட்டுக் கொண்டேன்
பதுங்கி எலியைப் பிடித்துக் கொண்டேன்.

கையை எலியுங் கடித்து விட்டது
கதறி நானுங் கையை விட்டேன்.

எலியோ துள்ளி உயரப் பாய்ந்தது
எட்டாப் பரணுட் குதித்து மறைந்தது.

கோபம் மறைந்தது முகமுஞ் சிவந்தது
கொட்டன் கொண்டு பானையை உடைத்தேன்.

கொட்டன் ஒடிந்தது குடமும் உடைந்தது
கோட்டை வெடிபோற் சத்தமுங்கேட்டது.

ஐயோ அங்கே ஓடி வந்தார்
அடுத்து ஐந்தடி எனக்குத் தந்தார்.

நானோ அழுதேன் அம்மா வந்தார்
நாலு ஏச்சும் எனக்குத் தந்தா.

நானோர் சின்ன வீரன் தானே
எனது திறமை கேளடி மானே.

நன்றி: **சின்னவீரன்** - 2001

# வண்ணத்துப்பூச்சி

*– கதிரேசன் –*

வண்ணவண்ணப் பூச்சி
வண்ணத்துப் பூச்சி
கண்ணுக்கழ காகக்
காட்சிதரும் பூச்சி

பட்டுத்துணி மீது
பஞ்சவர்ணத் தாலே
பொட்டிட்டது மேலே
போர்வைகொண்ட பூச்சி.

வீசிச்சிற காட்டி
மின்னவெலாளி கூட்டித்
தேசதேச மெல்லாம்
சென்று வரும் பூச்சி.

பூநிறைந்த சோலை
புல்வெளிக ளூடே
தேனிருக்கும் பூவைத்
தேடிச்செல்லும் பூச்சி

வண்ணமலர் மீது
வந்தமர்ந்து வேறோர்
வண்ணமலர் போலே
மாறிநிற்கும் பூச்சி



ஓடிப்பறந் தெங்கும்
ஓய்தலின்றி ஊக்கம்
கூடியுழைக் கின்ற
கோலவண்ணப் பூச்சி

பூவைவருத் தாமல்
போயமர்ந்து தேனை
நாவினிக்கக் கொள்ளும்
நாகரிகப் பூச்சி

உண்மையொன்று கண்டோம்
ஊக்கத்திறம் கண்டோம்
வண்ணப்பூச்சி நன்றே
வாழ்ந்திடுவோம் இன்றே.

வண்ணப்பூச்சி போலே
வாழ்ந்திடுதல் வேண்டும்
எண்ணமிருந் தென்ன
இறக்கையெமக் கில்லை.

*நன்றி: கதிரேசனின் சிறுவர் பாடல்கள்-1993*

# ஆடிப் பாடுவேம்

– ச. அருளானந்தம் –

அன்பை அம்மா ஊட்டுவார்
அறிவை அப்பா காட்டுவார்
அண்ணா காவல் செய்குவான்
அக்கா அணைத்துக் கொள்ளுவாள்.

பாடம் சொல்லித் தந்தவர்
பாரில் தெய்வம் போற்றுவம்
ஆடல் பாடல் யாவையும்
அறிந்தே கற்றுத்தேடுவம்.

உண்மை பேசி உயருவோம்
உ றவைப் பெருக்கி வாழுவோம்
எண்ணித் தெளிவைப் பெற்றிடில்
எடுத்த செயலை முடிக்கலாம்.

சோம்பல் தன்னை விரட்டுவோம்
சுழன்று சேவை செய்குவோம்
ஆம்பல் போல மகிழுவோம்
ஆடி ஆடிப் பாடுவோம்.

நன்றி: சின்னச் சின்னப் பாட்டு 2000



உ
சிவமயம்

# நன்றி

★ எங்கள் அன்புத் தெய்வம் அருமைத் தந்தை அவர்களின் இறுதிக் கிரியைகளிற் கலந்து எங்கள் துன்பத்திற் பங்கு கொண்டவர்களுக்கு

★ இறுதிக் கிரியைகள் ஒழுங்காக நடைபெற உதவியவர்களுக்கு,

★ இரங்கற் செய்திகளைத் தொலைபேசி மூலம் தந்திமூலம் அஞ்சல் மூலம் தெரிவித்தவர்களுக்கு,

★ மலர், மாலை, மலர்வளையம் என்பவற்றுடனாகி அஞ்சலி செலுத்தி யோர்க்கு,


★ அந்தியேட்டி சார்பான கிரியைகளிற் கலந்து கொண்டோருக்கு,

★ அமரரின் ஆத்மசாந்தியை நோக்கமாகக் கொண்டு நடைபெற்ற மதிய போசனை விருந்திற் கலந்து கொண்டவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்


| *மனைவி* | *பிள்ளைகள்* | *மருமக்கள்* |
|---|---|---|
| வாசுகி பாலச்சந்திரன் | சிவநந்தன் | வித்தியா |
| | ஷர்மிளா | கிருபரன் |
| | சிந்துஜா | ரஜிவ் |

*15 B, Don Carolis Road*
*Colombo - 5, Tel.: 501314*

# வம்சாவளி



சிவக்கொழுந்து + கனகம்மா
சதாசிவம் + வள்ளியம்மை
சங்கரப்பிள்ளை + செல்லம்மா
சுந்தரம் + நன்னிப்பிள்ளை
சின்னத்துரை
சோதிப்பிள்ளை
இராஜரட்னம்
பரமேஸ்வரி
பாலச்சந்திரன்
புவனச்சந்திரன்
சிவமலர்
வசந்தமலர்
இந்துமலர்
ஞானச்சந்திரன்
வரதராஜன்
வனஜா
வாசுகி
வத்சலா
வசந்தி
வளர்மதி
வாமசக்தி
சிவந்தன் + வித்யா
ஷர்மிலா + கிருபரன்
சிந்துஜா + ரஜிவ் தர்மேந்திரா
பூஜிதா
துவாரகேஷ்



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்



PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 330195.